பக்கங்கள்: எட்டு

Registered as a Newespaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2028 கார்த்திகை 23 திங்கட்கிழமை 8-12-1997 UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 10

# யாழ். உள்ளூராட்சித் தேர்தலை பின்போடக் கோருகிறது கூட்டணி!

## கட்சிகளிடமுள்ள ஆயுதங்களை களையுமாறும் வற்புறுத்து

கொழும்பு, டிசம்பர் 8

யாழ். மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கும், கிளிநொச்சி மாவட்டம் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கும் நடைபெற உள்ள தேர்தல்களைப் பின்போடுமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்று கொழும்பில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் "பொலிட் பியூரோ" கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

தேர்தல்கள் நடைபெறமுன் ஆயுதம் தாங்கிய அரசியல் கட்சிகளின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்றும் கூட்டணி கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையகத்தில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில்

(8ஆம் பக்கம் பார்க்க)

## புளொட் ஒரு மாதகாலம் பின்போடக் கோருகிறது

கொழும்பு, டிச. 8

யாழ். மாவட்டத்தில் அரசு அறிவித்துள்ள உள்ளூராட்சித்தேர்தல்களை குறைந்த பட்சம் ஒருமாத காலத்துக்காவது தள்ளிப் போடுமாறு மக்கள் ஜனநாயக விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கேட்டுள்ளார்.

நிச்சயமாக நாம் தேர்தலில் போட்டியிடுவோம் என்று தெரிவித்த அவர் இப்போது இருக்கின்ற சூழலில் சுதந்திரமான-நேர்மையான தேர்தல் நடத்தப்பட முடியாது என்றும் தெரிவித்தார். (இ-3)

## கைதடியில் இறந்தவர் ஆசிரியர்

யாழ்ப்பாணம், டிச. 8

கைதடி வடக்கில் நேற்று முன்தினம் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானவர் கைதடி விக்கினேஸ்வராக் கல்லூரி ஆசிரியரான தம்பி ஐயா ரவீந்திரன் (42 வயது) என அடையாளம் காணப்பட்டார்.

யாழ். ஆஸ்பத்திரியில் இடம்பெற்ற மரணவிசாரணையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பையொட்டி கொழும்பு 6 வலயங்களாகப் பிரிக்கப்படும்

கொழும்பு, டிச. 8

கொழும்பு நகரின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் வகையில் கொழும்பு நகரம் 6 வலயங்களாகப் பிரிக்கப்பட்டு ஒருங்கிணைப்பு கூட்டுப் பாதுகாப்புத் திட்டம் ஒன்று நடைமுறைக்கு வரவிருக்கிறது.

கொழும்பு நகரின் பாதுகாப்புக்கு பொறுப்பாக-கட்டளையிடும் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள மேஜர்ஜெனரல் சாலிய நமுனியின் கீழ் இந்த ஆறு வலயங்களும் இயங்கும்.

பொலீஸ், இராணுவ, கடற்படை ஆகியவற்றைச் சேர்ந்த விசேடமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்கள் இந்தப்பணியில் ஈடுபடுத்தப் படு

(8 ஆம் பக்கம் பார்க்க)

### லித்துவேனியாவிலிருந்து

## 200 இலங்கையர்கள் நாடு கடத்தப்படுவர்!

கொழும்பு, டிச. 8

பால்கன் நாடுகளில் ஒன்றான லித்து வேனியாவில் தங்கியுள்ள 200 இலங்கையர்கள் உட்பட 762 சட்டவிரோத வெளிநாட்டவர்களை நாடு கடத்த லித்து வேனியா வெளிநாட்டவர் பதிவு நிலையம் தீர்மானம் எடுத்துள்ளது.

வெளிநாட்டு முகவர்களால் அழைத்துவரப்பட்ட 200 இலங்கையர்கள் தலைநகர் வில்லியஸுக்கு வெளியே முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள்.

பயண ஆவணங்கள் எதுவுமின்றி தங்கியுள்ள இந்த இலங்கையர்களை நாடு கடத்த அங்கு பயண ஆவணங்கள் தயாரிக்கப்படுகின்றன.

இவர்களிடம் லித்து வேனியாவுக்குள் நுழையவோ அல்லது அங்கிருந்து வேறு நாடுகளுக்கு செல்வதற்கோ பயண ஆவணங்கள் எதுவும் இல்லை என வெளிநாட்டவர் பதிவு நிலைய இயக்குநர் ஈவால்டாஸ் ருயின்யிலா தெரிவித்தார். (இ-21)

### வன்னி மக்கள் நிலை குறித்து ஆராய

## தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் அனுருத்தவுடன் சந்திப்பு

கொழும்பு, டிச. 8

வன்னிப் பகுதி மக்களின் நிலைவரம் குறித்து ஆராய்வதற்காக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையை நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் நாளை சந்திக்கவிருக்கின்றனர்.

வன்னியில் மக்கள் படும் இன்னல்கள் குறித்து நேரில் கண்டு மதகுருமார் குழு ஒன்று சமர்ப்பித்த அறிக்கை தொடர்பாக இச்சந்திப்பின் போது தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகள் எடுத்துக் கூறுவர்.

பாதுகாப்பு அமைச்சு அலுவலகத்தில் நடைபெறும் இந்தச் சந்திப்பில் வன்னியில் இன்னல்படும் மக்களுக்காக மருந்து மற்றும் உணவுப் பொருள்களை அனுப்புவது தொடர்பாக ஆராயப்படும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சுழிபுரத்தில் சூட்டுக்கு ஒருவர் பலி

யாழ்ப்பாணம், டிச. 8

சுழிபுரம் வழக்கம்பரையில் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பனிப்புலம், பண்டத்தரிப்பைச் சேர்ந்த சுந்தரம் பிள்ளை நவரத்தினம் (வயது 62) என்பவரே சூட்டுக்குப் பலியானவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு மரண விசாரணை முடிவடைந்த பின்னர் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (இ-9)

## வடக்கே வர 2 ஆயிரம் படையினர் இரத்மலானையில் தவம்கிடப்பு!

கொழும்பு, டிச. 8

வடக்கில் இருந்து விடுமுறையில் தெற்கே சென்ற படையினரில் சுமார் 2 ஆயிரம் பேர் மீண்டும் வடக்கே வருவதற்கு இரத்மலானை விமானத் தளத்தில் தவம் கிடக்கின்றனர்.

இப்படிக் கொழும்பில் இருந்து வரும் 'சண்டே ரைம்ஸ்' தகவல் வெளியிட்டுள்ளது.

காலநிலை சீர்கெட்டிருப்பதால் விமானப்படையின் விமானங்களின் பலாலிக்கான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாகவே விடுமுறையில் சென்றிருந்த படையினர் பலாலிக்கு வர முடியாத நிலையில் இரத்மலானை விமானத்தளத்தில் தங்கியுள்ளனர்.

லயன் எயர் விமானங்கள் ஆபத்தைப் பணயம் வைத்து சேவையில் ஈடுபடுவதாகவும் —

தமது விமானங்கள் அப்படிச் செய்ய முடியாது என்றும் — விமானப்படையினர் கூறுவதாக 'சண்டே ரைம்ஸ்' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# மனித உரிமைகள் தினத்தன்று நகரில் பேரணி, உண்ணாவிரதம்!

## நேற்று நடந்த கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், டிச. 8

குடாநாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைதாகி தகவல் தெரியாதுள்ளவர்களின் விபரங்களை வெளியிடக் கோரி நாளை [illegible] தினத்தன்று — யாழ். நகரில் பேரணியும், உண்ணாவிரதமும் நடைபெறவிருக்கின்றன.

கைதாகி தகவல் தெரியாதுள்ளவர்களின் பாதுகாவலர் சங்கமும், அன்னையர் முன்னணியும் நேற்றுக் காலை நடத்திய கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

கைதாகி தகவல் தெரியாதுள்ளவர்களின் பாதுகாவலர்கள் சுமார் 400 பேர் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றினர்.

அன்று காலை 9.00 மணிக்கு சங்கப் பணிமனையில்

(8ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரண அறிவித்தல்கள்

## திருமதி இலட்சுமணன் ஸ்ரீறஞ்சினிதேவி

கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமணன் ஸ்ரீறஞ்சினிதேவி அவர்கள் 06-12-97 அன்று அகாலமரணமானார்.

அன்னார் இலட்சுமணன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சரவணமுத்து—அன்னக்குட்டி அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா தெய்வானைப்பிள்ளையின் மருமகளும், லங்காயினி, பரநிருபன் (பிரான்ஸ்), முகுந்தன், றஜித்தா (சுண்டுக்குளி மாணவி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சண்முகநாதன், சிவசோதி. சிவதேவி அம்மா, ஸ்ரீஞானதேவன், செகருணநாதன், சிர்திமாலா ஆகியோரின் சகோதரியும், நடராசா, நமசிவாயம். செல்வராசா, வேலாயுதம், பொன்னம்மா, இராசம்மா, காலஞ்சென்ற செல்வரத்தினம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07-12-97 அன்று கைதடியிலுள்ள அன்னாரின்இல்லத்தில்நடைபெற்றன. இவ்வறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கணவர், பிள்ளைகள்.

கைதடி தெற்கு,
கைதடி.

(51649)

## திருமதி செல்லத்துரை பொன்னம்மா

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை பொன்னம்மா 6. 12. 97 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், திரு இராசலிங்கம், இராசதுரை (கொழும்பு), திருநாவுக்கரசு (கோண்டாவில் தபாலகம்), ருக்குமணிதேவி, கைலாசதுரை ஆகியோரின் அன்புத்தாயாரும், விமலாதேவி, தேவி, இராஜேஸ்வரி, சந்தானலட்சுமி தங்கரட்ணம் (சாந்தலிங்கப் பத்தர் அன்சன்ஸ், உடுவில்) ஆகியோரின் அன்பு மாமியாரும், மாலாதேவி, ரஞ்சினிதேவி, உதயகுமார், செல்வராஜா, ஜெயா, விஜயகுமார், சுரேஸ், வதனி, அனுசியா, நித்தியா, ராசன், ரூபன் குமார், மதன், குகதாஸ், மகேந்திரராஜா, நிர்மலா, லோகராஜா, குமாரராஜா, கிருபாகரன், அமுதகரன், சிறீகரன், ரமணகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் வெண்ணிலவன், தர்மி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 7. 12. 97இல் உடுவிலில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்,

தகவல்:
மகேந்திரராஜா
(பேரன்)

உடுவில்.

[சி/2289]

## திருமதி மயிலு சின்னப்பிள்ளை

உடுப்பிட்டி நாவலடியைச் சேர்ந்த திருமதி மயிலு சின்னப்பிள்ளை 06 - 12 - 1997 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற குட்டியர் மயிலுவின் அன்பு மனைவியும், செ. தவமணி, ம. நாகம்மா (இளைப்பாறிய முகாமையாளர், உடுப்பிட்டி M. P. C. S), குட்டித்தம்பி (அதிபர், யா / தேவரையாளி இந்துக்கல்லூரி), தேவராஜா (கனடா), சிவகாந்தி (இத்தாலி), யோகராஜா (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. செல்வமாணிக்கம், திருமதி இரஞ்சிதம் குட்டித்தம்பி (அதிபர், யா / உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), ஆகியோரின் அன்பு மாமியாரும், தாட்சாயினியின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06 - 12 - 1997 பிற்பகல் 3. 00 மணியளவில் வல்லை மயானத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. தாட்சாயினி
(பேர்த்தி)

''இராஜ பவனம்'',
நாவலடி,
உடுப்பிட்டி.

(51652)

## கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம், டிச. 8

சர்வதேச ஊனமுற்றோர் தினம் கடந்த 3 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது. இதனை ஒட்டி யாழ். பிரதேச செயலகம் கட்டுரைப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

''உடற்குறைபாடுகள் வாழ்க்கைக்குத் தடையல்ல'' என்ற தலைப்பில் நடத்தப்படவுள்ள இக் கட்டுரைப் போட்டி இரண்டு பிரிவாக நடத்தப்படும். ஒன்று பாடசாலைமாணவர்களுக்கானது. மற்றையது மாணவர்கள் அல்லாதவர்களுக்கானது. ஒவ்வொரு பிரிவிலும் வெற்றியீட்டும் மூவருக்கு பெறுதியான பரிசில்கள் வழங்கப்படும். கட்டுரையின் அளவு வரையறுக்கப்படவில்லை. கலந்துகொள்ள விரும்புகிறவர்கள் கட்டுரைகளை எழுதி ''பிரதேச செயலாளர், சமூக சேவைகள் பிரிவு' செயலகம், யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கு எதிர்வரும் 20 ஆம் திகதிக்குமுன் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்க வேண்டுமென பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்கள் தங்கள் கட்டுரைகளை அதிபர் மூலம் உறுதிப்படுத்தி அனுப்புதல்வேண்டும்.

## கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10-00 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெற உள்ளதாக அரச அதிபர் க. சண்முகநாதன் அறிவித்துள்ளார். (இ-9)


எமது
புதிய வெளியீடு

ராம்ஜீ நடித்த
வீரபாண்டி
கோட்டையிலே

சாய்குமார், ரகுவரன்
நடித்த
சேர்க்கிள்
இன்ஸ்பெக்டர்

ஒறிஜினல் வெளியீடு

காவியத்தலைவன்
தர்மத்தின் தலைவன்
கோகுலம்
சின்ன பேடன்

CO பிரமிட் வெளியீடு

பொற்காலம்
பெரியமனுஷன்
ஜானகிராமன்

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.

(சி/2293)


# மாரண அறிவித்தல்கள்

## தம்பிஐயா இரவீந்திரன் (ஆசிரியர்)

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கைதடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா இரவீந்திரன் (ஆசிரியர், கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்) அவர்கள் 5-12-97 இரவு அகாலமரணமானார்.

இவர் இணுவில் மேற்கு காலஞ்சென்ற சின்னப்பு தம்பிஐயா மற்றும் திருமதி செல்லம்மா அவர்களின் அன்பு மகனும், சரோஜினிதேவி (யாழ். பிரதேச செயலகம்) அவர்களின் அன்புக் கணவரும், முகுந்தன், இரகுலன், இரகுலினி (யாழ். புனித டொன் பொஸ்கோ வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், கமலேஸ்வரன் (தபால் அதிபர், வயாவிளான்), பரமேஸ்வரன் (ஆசிரியர், கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்), நகுலேஸ்வரன் (ஆசிரியர், சுதுமலை வடக்கு, த. க. பாடசாலை, கமலாகரன், மனோகர் (நூலகர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்), பாஸ்கரன் (ஜேர்மனி), கமலேஸ்வரி சின்னத்துரை (ஆசிரியர், இராமநாதன் கல்லூரி), ரஜனி குலசேகரம் (கொழும்பு) ஆகியோரின் சகோதரரும், விக்கினேஸ்வரன், மயில்வாகனம் (பொறியியலாளர், கனடா), சாரதாதேவி (கனடா), நல்லநாதன் (கனடா), சத்தியதேவி (ஆசிரியர், வவுனியா) ஆகியோரின் மைத்துனரும், அமரரான இ. சுப்பிரமணியம் (ஆசிரியர்) மற்றும் திருமதி சின்னம்மா ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கைதடி வடக்கில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி இ. சறோஜினிதேவி
(மனைவி)

கைதடி வடக்கு,
கைதடி.

(51651)

## சண்முகம் பாலச்சந்திரன்

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், தற்பொழுது கோப்பாயில் வசித்து வந்தவருமாகிய சண்முகம் பாலச்சந்திரன் 7-12-97 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றதிரு. திருமதி சண்முகம் வள்ளிப்பிள்ளையின் மகனும், திருமதி பா. ஞானரத்தினத்தின் அன்புக் கணவரும், பாமினி (யாழ். பல்கலைக்கழகம், விஞ்ஞான பீடம், முதலாம் ஆண்டு) காந்தரூபன் (யாழ். இந்துக் கல்லூரி மாணவன், கணிதப் பிரிவு 99) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான மகாலக்ஷ்மி, துரைசிங்கம் மற்றும் வேலாயுதம், ரேவதி, இராசையா, கந்தசாமி, செல்வலட்சுமி, அருணகிரிநாதன், செல்வம் ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (8-12-97) நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி பா, ஞானரத்தினம்
(மனைவி)

கிளுவானை ஒழுங்கை,
கோப்பாய்.

(51655)

## திருமதி கிறேஸ் செல்வமணி யேசுதாஸன்

கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்டவரான திருமதி கிறேஸ் செல்வமணி யேசுதாஸன் 02-12-97 இல் கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று 8 - 12 - 97 திங்கட்கிழமை காலை 9. 30 மணியளவில் இல. 9 சம்பியன் லேன், கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்,

தகவல்:
பிள்ளைகள்

(51644)

## இராசையா செல்லத்துரை

கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சங்குவேலியை வசிப்பிடமாகக் கொண்டவருமான ஓய்வுபெற்ற அதிபர் இராசையா செல்லத்துரை 7 - 12 - 97 இல் காலமானார்.

இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவபாலன் (உள்ளூராட்சித் திணைக்களம், நல்லூர்), மகேஸ்வரன் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்றவரான அம்பிகைபாலன், சாரதாதேவி (ஆசிரியை, மகளிர் கல்லூரி, மானிப்பாய்), கேதீஸ்வரன் (L.C.L, K.K.S), மகேந்திரன் (வலி. கிழக்கு பிரதேச சபை. நீர்வேலி), இந்திராதேவி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், லலிதகுமாரி, கௌரி, பிறேமாநிதி (ஆசிரியை, சின்மயபாரதி), பவானி, பாலசுப்பிரமணியம் (நிலஅளவையாளர், வவுனியா), நளாயினி (ஆசிரியை), பாலகிருஷ்ணன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (8 - 12 - 97) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
சிவபாலன்
(மகன்)

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

(51656)

# நினைவஞ்சலி

ஈராண்டு 9 ஆம் மாதம்





**அமரர் சதாசிவம் நடராசா**

மலர்வு: 10-03-1924
உதிர்வு: 30-11-1995

**அமரர் நடராசா நாகேஸ்வரி**

மலர்வு: 22-03-1927
உதிர்வு: 14-03-1997

திதி: 08 - 12 - 1997

அன்பின் திருவுருவாய் பண்பின் இருப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய் எமை எல்லாம் வழி நடத்திய எங்கள் அன்புத் தந்தையே! தாயே!

நீங்கள் எமை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு எமை விட்டு என்றுமே அகலாது!

உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைனைப் பிரார்த்திக்கும்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

செருக்கல் லேன்,
டச்சு றோட்,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போர் விமானங்களை ஏற்றிச் சென்ற அன்ரனோவ் விமானம் சைபீரியாவில் வீழ்ந்தது!

## 150 பேர் மரணம்?

மொஸ்கோ, டிச.8

**ரஷ்ய விமானப்படையின் மிகப் பெரிய போக்குவரத்து விமானமான 'அன்ரனோவ்-124'ரக விமானம் ஒன்று நேற்று முன்தினம் சைபீரியாவில் வீழ்ந்து நொறுங்கி விபத்துக்குள்ளானது.**

சைபீரியாவின் இக்குட்ஸ் -2 என்ற நகரில் உள்ள இராணுவத் தளத்தில் இருந்து புறப்பட்ட இந்த விமானம் அடுத்த சில நிமிடநேரத்தில் நகரின் 5 மாடிக்கட்டடம் ஒன்றின் மீது வீழ்ந்து நொறுங்கித் தீப் பிடித்தது.

இதனால் அருகில் இருந்த பல கட்டடங்களும் இடிந்தன. தீ பல மணிநேரமாக தொடர்ந்து எரிந்து கொண்டிருந்தது.

இந்த விபத்தினால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் குறித்து முன்னுக்குப்பின்முரணான தகவல்கள் முதலில் வெளியாகின.

நகரவாசிகள் தெரிவித்த தகவலின் படி படையினர், விமானிகள், பொதுமக்கள் உட்பட 150-க்கு மேற்பட்ட பயணிகள் விபத்தில் மாண்டு போனதாக அஞ்சப்படுகிறது.

மற்றொரு தகவலின் படி இந்த விமானம் இரண்டு 'சுகோய்' ரகசண்டை விமானங்களை வியட்நாமுக்கு ஏற்றிச் சென்றதாகவும்—

சுமக்க முடியாத பாரம் விமானத்தின் மீது சுமத்தப் பட்டதால் அது வீழ்ந்து நொறுங்கியதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

விமான ஓட்டியின் தவறுதான் விபத்துக்குக் காரணம் என்று இன்னொரு தகவல் தெரிவித்தது.

தீ மற்றும் கடும் குளிர் காரணமாக விமானம் வீழ்ந்த பகுதியை மீட்புப் பணியாளர்களால் நெருங்க முடியவில்லை. சைபீரியாவில் தற்போது வெப்பநிலை— 20 பாகையாக குறைந்துள்ளது.

இரவு நேரத்தில் விபத்து நேர்ந்ததால் தீயணைப்புப் படையினர் குளிரையும் எதிர்த்துப் போராடவேண்டி இருந்தது.

விமானத்தில் பொருத்தப்பட்டிருந்த நான்கு கறுப்புப் பெட்டிகளும் மீட்கப்பட்டுள்ளன.

இந்தப் பேரழிவு குறித்து அதிர்ச்சி அடைந்த அதிபர் பொறிஸ் யெல்ட்சின் கிரெம்ளினில் உடனடியாக அவசர கூட்டம் ஒன்றைக் கூட்டினார்.

மொஸ்கோவில் இருந்து கிழக்கே 3ஆயிரம் மைல் தொலைவில் விபத்து நடந்த இக்குட்ஸ்-2 என்ற நகருக்கு பிரதமர் செர்னோமிடின் தலைமையிலான விசாரணைக் குழு ஒன்றை இவர் அவசரமாக அனுப்பிவைத்தார். (ஐ)

## 100 தொன் எரிபொருள் விமானத்தில் இருந்தது

விபத்து இடம் பெற்றவேளை விமானத்தில் 100 தொன் நிறையுள்ள எரிபொருள் நிரப்பப்பட்டிருந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் வியட்நாமுக்கு ஏற்றுமதி செய்வதற்காக இருயுத்த விமானங்கள் விமானத் தொழிற்சாலையில் இருந்து இந்த விமானம் ஏற்றிச் சென்றதையும் அவர்கள் உறுதி செய்தனர்.

விமானம் வீழ்ந்து நொறுங்கியதும் பெரும் வெடிப்பைத்தொடர்ந்து எரிபொருள் சிதறிப் பரவியதால் அப்பிரதேசத்தில் தீ மூண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

விபத்துக் குறித்து உயர்மட்ட விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. ( )

## விமான விபத்துக்கள் ரஷ்யாவில் அதிகரிப்பு

மொஸ்கோ, டிச. 8

ரஷ்யாவின் விமானத்துறை வரலாற்றில் இந்த ஆண்டு கறுப்பு ஆண்டு என விவரிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு இடம்பெற்ற விமான விபத்துக்களில் சைபீரியாவில் நேற்று முன்தினம் நடந்த விபத்து மிக மோசமானது என வர்ணிக்கப்படுகிறது.

கடந்த மார்ச் மாதம் வாடகைக்கு அமர்த்தப்பட்ட 'அன்ரனோவ் -'24' ரக விமானம் ஒன்று துருக்கிக்குச் சென்று கொண்டிருந்த சமயம் வீழ்ந்து நொறுங்கியதில் 50 பயணிகள் வரை கொல்லப்பட்டனர்.

கடந்த ஆண்டு ரஷ்யாவில் இடம் பெற்ற 43 விமான விபத்துச் சம்பவங்களில் 219 பேர் உயிரிழந்துள்ளதாக மதிப்பீடு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## 38 சடலங்கள் மீட்பு

மொஸ்கோ, டிச. 8

விமானம் வீழ்ந்து நொறுங்கிய இடத்தில் இருந்து நேற்றுப் பகல் 38 சடலங்கள் மீட்கப்பட்டன.

தீ தொடர்ந்து எரிந்து கொண்டிருந்ததால் விமானச் சிதைவுகளுக்குள் இருந்த சடலங்கள் மிகவும் உருக்குலைந்த நிலையில் காணப்பட்டன.

விமானிகள் உட்பட 46 பேர் மட்டுமே இந்த விபத்தில் பலியானதாக பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் மொஸ்கோவில் தெரிவித்தார்.

கட்டட இடிபாடுகளுக்குள்ளும் சடலங்கள் இருக்கலாம் என அஞ்சப்பட்டதால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன. (ஐ)

## பங்களாதேஷில் பூரண ஹர்த்தால்

டாக்கா, டிச. 8

பங்களாதேஷில் சாந்திபாஹினி தீவிரவாதிகளுடன் அரசு அண்மையில் செய்து கொண்ட சமாதான உடன்படிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடு முழுவதும் நேற்று ஒரு நாள் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப் பட்டது.

நாட்டின் நலன்களுக்கு எதிராக இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருப்பதாக பிரதான எதிர்க்கட்சியான பங்களாதேஷ் தேசியவாதக்கட்சியும், அதன் ஏழு தோழமைக் கட்சிகளும் குற்றஞ் சாட்டியுள்ளன.

அரசமைப்பின் பல சட்டவிதிகளை இந்த ஒப்பந்தம் மீறியுள்ளது என்றும் எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

நேற்றைய ஹர்த்தாலால் டாக்காவில் நேற்று இயல்பு நிலை பாதிக்கப்பட்டிருந்தது. வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள் என்பன மூடப்பட்டிருந்தன. (ஐ)

## கண்ணிகளை அகற்ற 125 நாடுகள் நிதி

உலகெங்கும் ஆள்களுக்கு எதிரான நிலக் கண்ணிவெடிகளை ஒழிக்கும் சர்வதேச உடன்படிக்கையில் 125 நாடுகள் ஒப்பமிட்டுள்ளன.

உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து உலகின் பல பகுதிகளிலும் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணிகள் மிதிவெடிகளை அகற்றுவதற்கு 40 லட்சம் டொலர் நிதி உதவி வழங்கவும் இந் நாடுகள் இணக்கம் தெரிவித்துள்ளன.

நிலக்கண்ணிகளைத் தடை செய்யும் உடன்படிக்கையில் கையொப்பம் இடுவதற்காக 125 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கடந்த வாரம் கனடாவின் ஒட்டாவா நகரில் கூடினர்.

இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட நாடுகள் நிலக்கண்ணிவெடி உற்பத்தியையும், உபயோகத்தையும், விற்பனையையும், அவற்றைக் களஞ்சியப்படுத்துவதையும் முற்றாகத் தடைசெய்ய இணங்கியுள்ளன. (ஐ)

## பிறந்த சிறிது நேரத்தில் குழந்தை திருடப்பட்டது

### பிரிட்டிஷ் மருத்துவமனையில் பரபரப்பு

லண்டன், டிச.8

இங்கிலாந்தின் தென் பகுதியில் உள்ள மருத்துவமனை ஒன்றில் குழந்தை ஒன்று பிறந்த சிறிது நேரத்துக்குள் களவாடப்பட்டது.

இச் சம்பவத்தை அடுத்து பிரிட்டிஷ் மருத்துவமனைகளில் மகப்பேற்றுப் பிரிவுகளின் பாதுகாப்பு ஏற்பாடுகள் மறு பரிசீலனைக்குட்படுத்தப் பட்டுள்ளன.

திருடப்பட்ட குழந்தை எவ்வித தீங்கும் இழைக்கப்படாத நிலையில் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

இத் திருட்டுச் சம்பவம் தொடர்பாகப் பெண் ஒருவர் பொலீஸாரல் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

கடந்த 3ஆண்டுகளுக்கு முன்னர் மிட்லாண்ட் பகுதியில் உள்ள மருத்துவமனை ஒன்றில் இருந்து குழந்தை ஒன்று கடத்திச் செல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து பிரிட்டிஷ் மருத்துவ மனைகளின் மகப்பேற்றுப் பிரிவுகளில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. (ஐ)

## 6 ஆயிரம் முஸ்லிம்கள் சென்னையில் கைதாகினர்

அயோத்தியில் பாபர் மசூதி இடித்துத் தரைமட்டமாக்கப்பட்ட நிகழ்வின் 5 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை ஒட்டி சென்னையில் பல்லாயிரக் கணக்கான முஸ்லிம்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கொட்டும் மழைக்கு மத்தியில் ஆர்ப்பாட்டம் செய்த சுமார் 5 ஆயிரம் பேரை பொலீஸார் கைது செய்தனர்.

தமிழக முஸ்லிம் முன்னேற்ற முன்னணியின் ஏற்பாட்டில் முஸ்லிம் சமூக அமைப்புக்கள் ஒன்றிணைந்து இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தின.

பாதுகாப்பு முன்னேற்பாட்டு நடவடிக்கையாக சென்னையில் முஸ்லிம் சமூகத்தவர்கள் சுமார் 6 ஆயிரம் பேர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். ஆயினும் திட்டமிட்டபடி முஸ்லிம் மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். (ஐ)

## கொலம்பியா பூமிக்குத் திரும்பியது

கலிபோர்னியா, டிச. 8

அமெரிக்க விண்வெளி ஓடமான கொலம்பியா தனது 16 நாள் விண்வெளிப் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் அதிகாலை பூமிக்குத்திரும்பியது.

ஏற்கனவே 24தடவை விண்வெளிப் பயணம் மேற்கொண்ட இந்த விண்வெளி ஓடத்தில் இம்முறை பயணம் செய்த 6 விண்வெளி வீரர்களில் இந்தியரான கல்பனா சௌலாவும் ஒருவராவார்.

## முஸ்லிம்களின் ஆதரவை அத்வானி கோருகிறார்

புதுடில்லி, டிச. 8

''நிலையான ஆட்சி'' என்பதே தமது கட்சியின் தேர்தல் பிரசாரமாக இருக்கும் என்று பாரதீய ஜனதாக் கட்சி தெரிவித்துள்ளது.

இஸ்லாமிய சமுதாய மக்கள் இம் முறை பாரதீய ஜனதாக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என்று தலைவர் எல். கே. அத்வானி கேட்டுள்ளார்.

கடந்த 50 வருடகாலமாக காங்கிரஸ்கட்சி முஸ்லிம் மக்களை ஓட்டுவங்கியாகவே நடத்தி வந்துள்ளது என்றும் அவர் கூறினார்.

இதேவேளை —

இந்தியாவில் நடக்கப் போகும் தேர்தல் நிலையற்ற கூட்டணி ஆட்சியையே தரும் என்று ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி படுதோல்வியடையும் என்றும் ஆய்வாளர்கள் கணித்துள்ளனர். (ஐ)

## தமிழ் நாட்டில் ரயில்களுக்கு தீவிர பாதுகாப்பு ஏற்பாடு

புதுடில்லி, டிச, 8

தமிழ் நாட்டிலும், கேரளாவிலும் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களை அடுத்து பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்துமாறு ரயில்வே அமைச்சர் ராம்விலாஸ் பஸ்வான் இரு மாநில அரசுகளையும் கேட்டிருக்கின்றார்.

இதனை [illegible] தின் ரயில்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவங்களில் உயிரிழப்புகள் ஏற்பட்டது குறித்து அவர் கவலை தெரிவித்தார்.

ரயில்களில் இத்தகைய சம்பவங்களைத் தடுப்பது குறித்து இரு மாநில அதிகாரிகளுடனும் தாம் பேச்சு நடத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

## அதிசய கன்றுக் குட்டி

ஹோசிமின், டிச.8

வியட்நாமின் தலைநகர் ஹோசிமின்சிற்றியில் 5கால்கள், இரண்டு வால்களைக் கொண்ட மாட்டுக் கன்றை மாடு ஒன்று பிரசவித்துள்ளது.

பின்புறமாக அமைந்துள்ள 5 ஆவது கால் ஏனைய கால்களைப் போன்றே வளர்ச்சி பெற்றுள்ளது. ஆனால் அக்கால் மட்டும் வெள்ளை நிறமாகக் காணப்படுகிறது. கன்றின் உடலின் ஏனைய பகுதிகள் மண்ணிறமாகும். (ஐ)

## கோவையில் சைக்கிள் குண்டு வெடித்து மூவர் பலி

சென்னை. டிச. 8

தமிழ் நாட்டின் கோவை மாவட்டத்தில் உடுமலைப் பேட்டையில் சைக்கிளில் பொருத்தப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் மூன்று பெண்கள் உயிரிழந்தனர்.

உடுமலை பஸ் நிலையத்துக்கு அருகே கடை ஒன்றின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிளில் இருந்தே நேற்று முன்தினம் இரவு குண்டு வெடித்தது.

கலவரத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் கோவையில் இச்சம்பவம் பதற்றத்தை அதிகரித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டன

சி. அரைன் சுரேஷ்குமார் ஆகிய எனது விசேட அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை (740193848V) இராணுவபாஸ் ஆகியவை யாழ்நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ். திருக்குடும்ப கன்னியர்மடத்தில் ஒப்படைத்து உதவவும்.
[51641]

### யாழ்ப்பாணத்தில்

அந்த ஆறு மாதங்கள பரம்பரை பரம்பரையாக வாசிக்க வேண்டிய கதை 275 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் கை வண்ணத்தில் உருவானது. யாழ்நகரில் எங்கும் கிடைக்கும் 50/-.
[51640]

### புத்தகங்கள் வாங்கப்படும்

பழைய பாடசாலைப் புத்தகங்கள் தமிழ், ஆங்கில நாவல்கள் மற்றும் சகலவிதமான புத்தகங்களும் வாங்கப்படும், விற்கப்படும். தொடர்பு: இல. 87, சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணம்.
[51647]

### காணி விற்பனைக்கு

சங்குவேலிப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் சிறு பழைய வீடு கிணற்றுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: க. பத்மநாதன்சித்தங்கேணிப்பிள்ளையார் கோயிலடி அல்லது திருமதி இ. பாலசிங்கம், பொது நூலகம், சுன்னாகம்.
[51635]

### தமிழ் தட்டச்சு

தமிழ் தட்டச்சு வேலைகள் மிகச்சிறந்த முறையில் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: ஆ. ரவீந்திரன், சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
[51650]

---

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
# வெள்ளி விழா

ஆசிரிய சேவையில் 25 வருடங்கள் பூர்த்தி செய்த பின்வரும் ஆசிரியர்களை சிறுஞ்சிறப்புடனும் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம.

(I) திரு. வி. ஜெயசீலன்
(II) திரு. கை. சிவரெத்தினம்
(III) திரு. க. சுந்தரலிங்கம்

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நலன்புரிசங்கம்.**

(51617)

---

## பாலன் புத்தக நிலையம்

புதிய வெளியீடுகள்!

குயில் பாட்டு, இராவணன் வதைப்படலம், கடலாடு காதை, திருப்பாவை, கண்ணன் பாட்டு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-
**பாலன் புத்தக நிலையம்**
87, சிவன் வடக்கு வீதி,
யாழ்ப்பாணம்.
(வைத்தீஸ்வராக் கல்லூரி அருகில்) (51648)

---

### பருத்தித்துறை
## பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் [வ.து]
# கேள்விப்பத்திரம் கோருதல்

சங்கத்தின் உழவு இயந்திரத்தின் இழுபொறிப் பெட்டி முழுமையாகத் திருத்தம் செய்யப்பட வேண்டியுள்ளது. இப் பெட்டியினை முழுமையாகத் திருத்தி அமைப்பதற்கு பொருத்தமானவர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 97 - 12 - 20-க்கு முன்னதாக பொதுமுகாமையாளர், பருத்தித்துறை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கிராமக்கோட்டடி, புலோலி என்னும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ விண்ணப்பிக்கலாம். கேள்விப்பத்திரம் சமர்ப்பிப்பதற்காக விண்ணப்பப் படிவங்களை ரூபா 100 செலுத்திச் சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விவரங்களுக்கு சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**பொது முகாமையாளர்**

கிராமக்கோட்டடி,
புலோலி. (சி/2286)

---

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி.
# கேள்வி அறிவித்தல் - 1998

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் இறைச்சிக்கடைகள், சந்தைகள் என்பவற்றை 1998 ஆம் ஆண்டு தை மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 1998 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆந் திகதிவரை குத்தகைக்கு விற்பனை செய்வதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 15. 12. 1997 முற்பகல் 10 30 மணிவரை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் நெல்லியடியிலுள்ள தலைமை அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு முற்பகல் 10. 45 மணிக்கு திறந்து பரிசீலனை செய்யப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரின் பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்களை உரிய கட்டணங்களைச் செலுத்துவதன் பேரில் அவ்வவ் உபஅலுவலகப் பொறுப்பதிகாரிகளிடமிருந்து 12.12.1997 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள பெறுபவர்கள் தமது அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும். கேள்விகள் தொடர்பான மேலதிக விவரங்களையும் நிபந்தனைகளையும் உப அலுவலகங்களில் அல்லது தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

**செ. ஸ்ரீநிவாஸன்**
விசேட ஆணையாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி, 01. 12. 1997.

| சந்தைகள், இறைச்சிக் கடைகள் | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச |
| 01. கோயிற் சந்தை | 150.00 | 3,000 00 | 52,110.00 |
| 02. நெல்லியடி மாட்டிறைச்சிக்கடை இல. 2 | 150.00 | 3,000.00 | 1,76,100.00 |
| 03. கோயிற் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 100.00 | 1,000.00 | 1,53,100.00 |
| 04. துன்னாலை வடக்குச் சந்தை | 100.00 | 500.00 | 1,325.00 |
| 05. அல்வாய் தெற்கு ஆட்டிறைச்சிக் கடை | 100.00 | 500.00 | 3,500.00 |

(சி/2282)

---

## ஊனமுற்றோர் தின விழா

தென்மராட்சி, டிச. 8
உலக ஊனமுற்றோர் தினத்தை யொட்டி தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைப்பிரிவினர் சாவகச்சேரியையன்ஸ்கழகம் கைதடி அறவழிப் போராட்டக்குழு ஆகியவற்றுடன் இணைந்து நடத்தும் ஊனமுற்றோர் தின விழா இன்று திங்கட்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும். (ஐ-117)

---

## யாழ். நகரிலே! கொழும்பு விலையில்
# அடையாள அட்டை கவரிடுதல் (LAMINATION)

அடையாள அட்டைமுதல் சகல ஆவணங்களும் கொழும்பு விலைக்கே கவரிட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

★ தரமான போட்டோ ஸ்ரற் பிரதிகளுக்கும்

# சன்லைற் றைக்கிளினேர்ஸ்
யாழ்ப்பாணம்.
கிளை;
**சன்லைற் மல்ரி சேவிஸ்**
கச்சேரியடி, யாழ்ப்பாணம்.

(51639)

---

## தொழில்நுட்பக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.
# மாணவர் அனுமதி- 1998

எமது கல்லூரியின் 1998 ஆம் கல்வியாண்டிற்கான பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேலதிகவிவரங்களை 17 - 10 - 97 ஆம்திகதிய அரச வர்த்தமானியில் அல்லது கல்லூரியின் அறிவித்தற்பலகையில் பார்வையிடலாம். விண்ணப்ப முடிவுத் திகதி 25 — 12 — 97 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

### கற்கை நெறிகள்

1. நீர்க்குழாய் பொருத்துநர் — 1வருடம், முழுநேரம்.
2. மரப்பொறி இயக்க வல்லுநர் — 1 வருடம், முழுநேரம்.
3. உலோக பொருத்து வல்லுநர் — 2 வருடம், முழுநேரம்.
4. மேசன் கற்கைநெறி — 1 வருடம், முழுநேரம்.
5. வானொலி, தொலைக்காட்சி, இலத்திரனியல் சேவை — 2 வருடம், முழுநேரம்.
6. மின்னியலாளர் — 2 வருடம், முழுநேரம்.
7. மோட்டார்வாகன வல்லுநர் — 2 வருடம், முழுநேரம்.
8. மின்கம்பி இணைத்தல் — 1 வருடம், பகுதிநேரம்.
9. வானொலி சீர்காப்பு — 1 வருடம், பகுதிநேரம்.
10. ட்ராக்டர்பொறிவலர் — 1 வருடம், பகுதிநேரம்.
11. மோட்டார் வாகன மின்வேலை — 1 வருடம், பகுதிநேரம்.
12, நீர்ப்பம்பு பழுதுபார்த்தல் — 1 வருடம், பகுதிநேரம்.
13. கணக்கீட்டு தொழிநுட்பவலருக்கான தேசிய தராதரப்பத்திரம — 2 வருடம், முழுநேரம். தமிழ்.
14. கணக்கீட்டு தொழிநுட்பவலருக்கான தேசிய தராதரப்பத்திரம் — 2 வருடம், பகுதிநேரம், தமிழ்/ ஆங்கிலம்.
15. சுருக்கெழுத்தாளர் தராதரப்பத்திரம் — 1வருடம் முழுநேரம், தமிழ் / ஆங்கிலம்.
16. சுருக்கெழுத்தாளர் தராதரப்பத்திரம் — 1வருடம் பகுதிநேரம், தமிழ் / ஆங்கிலம்
17. ஆங்கில தேசிய தராதரப்பத்திரம் — 1 வருடம், முழுநேரம்.
18. ஆங்கில தேசிய தராதரப்பத்திரம் — 2 வருடம் பகுதிநேரம்.
19. வியாபாரக் கற்கைகளிலான தேசிய தராதரப் பத்திரம் — 2 வருடம், பகுதிநேரம்
20. பொது நிர்வாகம் தொடர்பான தேசிய தராதரப்பத்திரம் — 2 வருடம், பகுதிநேரம்.
21. பயில் நிலை படவரைஞர்—1வருடம், முழுநேரம்.
22. தேசிய தொழிநுட்பவியல் தராதரப்பத்திரம் — குடிசார் எந்திரவியல் 3 வரு. பகுதிநேரம்.
23. தேசிய தொழிநுட்பவியல் தராதரப்பத்திரம் — பொறியியல், 3 வருடம், பகுதிநேரம்.
24. தேசிய தொழிநுட்பவியல் தராதரப்பத்திரம் — மினசாரமும், இலத்திரனியலும், 3 வருடம், பகுதிநேரம்.
25. தேசிய தொழிநுட்பவியல் தராதரப்பத்திரம் — கணிய அளவீடு, 3 வருடம், பகுதிநேரம்.

**க. ஜெயரத்தினம்,**
அதிபர்.

தொழிநுட்பக்கல்லூரி,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்,
1997 — 12 — 05. (சி/ 2274)

---

## யாழ். நகரில்..... நவீன நாகரிக உலகின் மற்றொரு ஜவுளிச் சமுத்திரம்
# ரம்மியாஸ் சில்க்ஸ்
121, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(51637)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தில் இதுவரை 50 ஆயிரம் பேர் பலி!

## அரசின் புள்ளி விவரங்கள் தகவல்

கொழும்பு, டிச. 8

வடபகுதி யுத்தம் காரணமாக கடந்த 15 ஆண்டுகளில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 50 ஆயிரத்து 124 என அரசாங்கத்தின் உத்தியோக பூர்வ புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த 11 ஆயிரத்து 397 பேரும், விடுதலைப் புலிகளைச் சேர்ந்த 24ஆயிரத்து 250 பேரும், பொதுமக்கள் தரப்பில் 13 ஆயிரத்து 312 பேரும், இந்திய அமைதிப்படை தரப்பில் ஆயிரத்து 165 பேரும் அடங்குவர் என அத்தகவல் தெரிவிக்கிறது.

ஆனால் போராட்டம் ஆரம்பமான காலத்தில் இருந்து கடந்த நவம்பர் மாதம்வரை தமது தரப்பில் 10 ஆயிரத்து 840 போராளிகளே பலியாயினர் என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதாக ''லக்பிம'' சிங்களப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

இவர்களில் 105 கரும்புலிகளும், ஆனையிறவுச் சமரில் 602 போராளிகளும், மணலாற்றுச் சமரில் 233 போராளிகளும், பூநகரிச் சமரில் 469 போராளிகளும், ''சூரியப் பிரகாசம்'' நடவடிக்கையின் போது 438 போராளிகளும், முல்லைத்தீவுச் சமரில் 315 போராளிகளும், ''உண்மை வெற்றி'' நடவடிக்கையின் போது 233 போராளிகளும் பலியாயினர் என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதாக அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கிறது.

அரசாங்கத்தின் புள்ளி விவரங்களின் படி வடபகுதி யுத்தம் காரணமாக சராசரியாக ஆண்டொன்றுக்கு 3 ஆயிரத்து 341 பேரும், நாளொன்றுக்கு 9 பேரும் பலியாகின்றனர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ-10)

நாடாளுமன்றத்தின்

# ஒரு நாள் அமர்வுக்கு ரூ.12 லட்சம் செலவு!

கொழும்பு, டிச. 8

நாளொன்றுக்கு நாடாளுமன்ற அமர்வுக்கு சுமார் 12 லட்சம் ரூபா செலவாகிறது எனவும் இதில் மூன்றிலொரு பகுதியான 4 லட்சம் ரூபா நாடாளுமன்ற உறுப்பினர்களின் உணவுத் தேவைக்காக மட்டும் செலவாகுவதாகவும் ''சண்டே ரைம்ஸ்'' தகவல் வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்ற அமர்வின்போது நாளாந்தம் உறுப்பினர்களுக்கு 67 விதமான உணவு வகைகள் தயாரிக்கப்படுகின்றன. இதை விட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் விரும்பினால் அவர் கேட்கும் விதத்தில் விசேட உணவும் தயாரித்து வழங்கப்படுகின்றதாம்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காகத் தயாரிக்கப்படும் உணவு வகைகளில் 30 சதவீதமானவை அதாவது சுமார் 1 லட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியானவை நாளாந்தம் வீணாக வீசப்படுகின்றன. நாடாளுமன்றத்தில் பணிபுரியும் ஊழியர்கள் எவரும் உணவுப் பொருள்களை வீட்டுக்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை எனத் தெரியவருகின்றது — என்றும் அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ-10)

# யாழ். உள்ளூராட்சித் தேர்தல் அரசியல் வாண வேடிக்கை

## அரசைச் சாடுகிறது ஜே. வி. பி.

யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது ஓர் ஏமாற்று வேலை. சூழ்ச்சி மிக்க தேர்தலையே அங்கு நடத்த அரசு திட்டமிட்டுள்ளது.

ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி) இவ்வாறு அரசைக் குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக ஜே.வி.பி. அமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

யாழ்ப்பாணத்தில் இன்று இராணுவ நிர்வாகமே நடைபெறுகின்றது. அங்கு சாதாரண அரசியலை நடத்தக்கூடிய ஆகக்குறைந்தளவு சாத்தியக் கூறுகள் கூட காணப்படவில்லை. அங்கு அரசாங்கமும், அவர்களைச் சார்ந்த ஈ.பி.டி.பி. போன்ற அமைப்புக்களுமே இந்தச் சூழ்நிலையில் அரசியலை நடத்தக்கூடியதாய் உள்ளது. அரசின் தீர்வுத் திட்டத்தை எதிர்ப்பவர்களைத் தங்கள் வழியில் திசை திருப்பும் நோக்கிலேயே இந்தத் தேர்தலை அரசு நடத்துகின்றது.

அரசின் ஆதரவுடன் இயங்கி வரும் தமிழ்க் குழுக்களை யாழ். மாவட்டத்திலுள்ள மக்களின் பிரதிநிதிகளாகக் காட்ட வேண்டிய தேவை இந்த அரசுக்கு உருவாகியுள்ளது. இந்தச் சூழலில் அங்கு எவராலும் பயம் இன்றி அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது. இங்கு தேர்தல் நடத்தப்படுவதென்பது அரசின் அரசியல் வாணவேடிக்கையாகவே தென்படுகிறது — என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-9-10)

## நேர்முகப் பரீட்சை

திருநெல்வேலி, டிச.8

மாணவ குடும்ப நல சேவையாளர்களை தெரிவு செய்வதற்கான நேர் முகப்பரீட்சை யாழ். அரசினர் போதனா வைத்தியசாலையில் எதிர்வரும் 10 ஆம் திகதி புதன் கிழமை நடைபெற விருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நேர்முகப் பரீட்சை இன்று 8 ஆம் திகதியன்று நடைபெறுவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஐ-135)

## மரக்கறி விலை அதிகரிப்பு

நெல்லியடி, டிச. 8

உடுப்பிட்டிச் சந்தையில் மரக்கறி விலை அதிகரித்துள்ளது.

பயற்றங்காய் கிலோ 48 ரூபாவாகவும், கத்தரிக்காய் கிலோ 60 ரூபாவாகவும், வெங்காயம் கிலோ 50 ரூபாவாகவும், உருளைக்கிழங்கு கிலோ 140 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

(இ-109)

# ஆயுதக் கிளர்ச்சிக்கு தெற்கில் திட்டமா?

## புலனாய்வுப் பிரிவு எச்சரிக்கை

கொழும்பு, டிச. 8

ஆயுதமேந்திய இளைஞர்கள் தெற்கில் கிளர்ச்சிகளில் ஈடுபடத் தயாராகி வருகிறார்கள் என புலனாய்வுப் பிரிவினர் அரசை எச்சரித்துள்ளனர்.

ஆயுதக் கிளர்ச்சிக்குத் தயாராகிவரும் இளைஞர்கள் நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள வியாபாரிகளுக்கு எச்சரிக்கைக் கடிதங்கள் அனுப்பியுள்ளனர் எனத் தெரியவருகிறது. வர்த்தகர்களிடமிருந்து இவ்வாறு மிரட்டிப் பெறும் பணத்தை ஆயுதக் கொள்வனவுக்கு பயன்படுத்துவதே அவர்களது முக்கிய நோக்கம் எனத் தெரிகிறது. மத்திய மாகாணத்தில் கண்டிப் பகுதியிலும், தென் மாகாணத்தில் பல இடங்களிலும் உள்ள வியாபாரிகளுக்கு மிரட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டிருப்பதாக புலனாய்வுப் பிரிவினர் எச்சரித்துள்ளதாக "திவயின" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

(ஐ-10)

# சிறைச்சாலை அதிகாரிகளை நீதியின் முன் நிறுத்தக் குழு

## அமைக்கப்படும் என்கிறார் பீரிஸ்

கொழும்பு, டிச. 8

சட்ட விரோதச் செயல்களில் ஈடுபடும் பொலீஸ் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளை நீதி மன்றத்தின் முன் நிறுத்துவதற்கு ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது என நீதி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அதன் ஆரம்ப நடவடிக்கையாக விரைவில் பக்கச்சார்பற்ற தனிநபர்கள் அடங்கிய விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்படும் எனவும் அந்த விசாரணைக்குழு சமர்ப்பிக்கும் அறிக்கையின் படி சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் பொலீஸ் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கும் நோக்கில் மேற்குறிப்பிட்ட ஆணைக்குழு நியமிக்கப்படவுள்ளது எனவும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலை அதிகாரிகள் சிலர் ஹெரோயின் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர் எனவும் பொலீஸ் அதிகாரிகள் சிலர் ஆயுத மற்றும் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர் எனவும் தனக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாக அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஐ-10)

# உள்ளத்து உணர்வின் வெளிப்பாடே சிற்ப, சித்திர கலை வடிவங்கள்

## மானச சஞ்சாரம் நிகழ்வில் சிற்பாசாரியார் உரை

நல்லூர், டிச. 8

உள்ளத்தின், உணர்வுகளின் வெளிப்பாடே சிற்பம் சித்திரம் போன்ற கலை வடிவங்கள். மன அமைதியும் சிந்தனைத் தெளிவும் இருக்கும் போதுதான் உயிரோட்டமுள்ள கலைப்படைப்புக்கள் உருவாகும்.

உலக உளநல நாளையொட்டி ''உதயன்'' ஆதரவுடன் சாந்திகம் நிறுவனம் நடத்திய 'மானச சஞ்சாரம்' நிகழ்ச்சியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசிய சிற்பசிரோன்மணி, ஆ. ஜீவரட்ணம் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்ற இந் நிகழ்ச்சிக்கு வைத்திய கலாநிதி செ.சு. நச்சினார்க்கினியன் தலைமை வகித்தார்.

ஜீவரட்ணம் தமது உரையில்மேலும்தெரிவித்ததாவது:

கலைஞர்களிடம் ஒழுக்கம் வாய்மை என்பன இருத்தல் வேண்டும். பிறர் துன்பத்தைக் கண்டு இரங்கும் மனப்பாங்கு தேவை. ஒரு கலைஞன் தான் வடித்த சிற்பத்தை அல்லது ஓவியத்தைப் பார்த்து பூரண திருப்தி கொள்வது அரிது. எனினும் அதனை ஏனையோர் பாராட்டும் போது மனநிறைவு ஏற்படுகிறது. இதன்மூலம் மேலும் சிறந்த படைப்புக்களை உருவாக்க மனப்பாங்குடன் கலைஞர்கள் செயற்பட வேண்டும். பொருளுக்காக எச் சந்தர்ப்பத்திலும் கலையை மலினப்படுத்துபவன் உண்மையான கலைஞனல்ல— என்றார்.

படைப்பாக்கம் என்ற பொருளில் பேசிய குழந்தை ம. சண்முகலிங்கம் தமது உரையில் கூறியதாவது:

மனித வாழ்வின் அனுபவத்தில் இருந்து பெறப்பட்டு மனிதனோடு சேர்ந்து தானும் மாற்றம் கொண்டு வருகின்ற ஒன்றுதான் கலையாக்கம். மானிட தரிசனமும், கலாதரிசனமும் சங்கமிக்கும்போது படைப்பாக்கம் பிறக்கிறது. இவ்வாறான படைப்பாக்கம் கலைஞனை மட்டுமன்றி அதனை நுகர்வோனும் அழகான வாழ்க்கைவாழ உதவுகிறது.

கலை உலகில் இல்லாத ஒன்றைக் கூறுவதல்ல. இதனால்தான் அது நுகர்வோருக்கு வியப்பைத் தருகிறது. தான் அறிந்த ஓர் உண்மையை அற்புதமான முறையில் வெளிப்படுத்தி விட்டதால் ஏற்படும் வியப்பதிசயம் அல்லது வியப்பார்வமே ரசானுபவத்தின் ஊற்றுக் கண்ணாகும்.

கலைப்படைப்பாக்கம் குழப்பமான வாழ்வில் ஒரு ஒழுங்கை ஏற்படுத்துவதாகும். படைப்புக்கான தூண்டுதல் பாரதியின் 'அக்கினிக் குஞ்சு' போன்றது. கலைப்படைப்பாக்கங்கள் எமது புலக்காட்சிக்குள் அகப்படும் அதே வேளை பல வெளி கடந்த தரிசனத்தையும் தந்து நிற்கின்றன.— என்று தெரிவித்தார்.

உலக உள நாளையொட்டி இடம்பெற்ற ஓவியப் படைப்பாக்கங்களுக்கான போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களையும் சான்றிதழ்களையும் சிற்பசிரோன்மணி ஜீவரட்ணம் வழங்கினார்.

ஓவியப் படைப்பாக்கப் போட்டி அம்மாவும், அப்பாவும் நானும், தந்தையின் கிராமம், பாழடைந்த கோயிலின் பரம்பொருள், சித்தம் அழகியார் ஆகிய நான்கு தலைப்புகளில் நடத்தப்பட்டன.

அதே தலைப்புகளில் ஆக்க இசை, கவியரங்கம், நாடகங்கள் ஆகியன நடைபெற்றன.

கலாநிதி எஸ். சண்முகலிங்கன் ஆக்க இசையையும், சோ. பத்மநாதன், கல்வயல் வே. குமாரசாமி, நா. சிதம்பரம் ஆகியோர் கவிதை அரங்கையும், க. ரதிதரன் செல்வி சி. ஜெயரஞ்சினி. செல்வி ந. நவதர்ஷனி, தே. தேவானந்தா ஆகியோர்நாடகங்களையும் வழங்கினர்.

விழாவிற்கு மண்டபம் [illegible]

(ஐ-103)

# எயர் லங்கா நிறுவனப்பங்குகள் எமிரேட்ஸ் விமான சேவைக்கு

## உயர்மட்ட குழு இன்று வருகிறது

கொழும்பு, டிச. 8

எயர்லங்கா விமான சேவை நிறுவனத்தின் 40 சதவீதமான பங்குகள் மத்திய கிழக்கைச் சேர்ந்த எமிரேட்ஸ் விமான சேவை நிறுவனத்திற்கு விற்கப்படவுள்ளன.

இது தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட எமிரேட்ஸ் விமான சேவை நிறுவனத்தைச் சேர்ந்த உயர்மட்டக் குழுவினர் இன்று கொழும்புக்கு வருகைதரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் தேசிய விமான சேவையான எயர்லங்காவின் பங்குகளைக் கொள்வனவு செய்ய ''எயர் இந்தியா'' ''தாய் எயர்வேஸ்'' உட்பட 37 விமான சேவை நிறுவனங்கள் போட்டியிட்ட போதிலும் எமிரேட்ஸ் விமான சேவை நிறுவனமே அதிக விலையில் பங்குகளைப் பெறுவதற்கு உடன்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது என 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

(ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமசமாஜக் கட்சி அமைச்சர்கள் விரைவில் பதவிகளைத் துறப்பர்?

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் இருந்து லங்கா சமசமாஜக் கட்சியினர் விரைவில் வெளியேறவுள்ளனர் என நம்பிக்கையான வட்டாரங்களைக் மேற்கோள் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இத் தகவலின்படி அரசில் அங்கம் வகிக்கும் அக்கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் பிரதி அமைச்சர்கள் எந்த வேளையிலும் தமது பதவிகளை ராஜினாமாச் செய்யக்கூடும் எனத் தெரிய வருகிறது.

அரசில் அங்கம் வகிக்கும் முக்கிய கட்சியாக லங்கா சமசமாஜக் கட்சி இருந்த போதிலும் நிர்வாக விடயங்கள் தொடர்பாக அரசு முடிவுகளை மேற்கொள்ளும் போது அக்கட்சியின் கருத்து அறியப்படுவதில்லை எனவும் அக் கட்சியின் கோரிக்கைகள் அரசினால் கவனிக்கப்படுவதில்லை எனவும் எனவே இக்காரணங்களால் அக்கட்சி விரக்தியடைந்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில் அரசிலிருந்து உடனடியாக வெளியேற வேண்டும் என அக் கட்சியின் இளைஞர் அணி தீவிரமாக பிரசாரம் செய்து வருகிறது.

இவ்விடயம் குறித்துகருத்து வெளியிட்ட அக் கட்சியைச் சேர்ந்த மூத்த உறுப்பினர் ஒருவர், தமது கட்சியினர் அமைச்சர் பதவிகளை ராஜினாமாசெய்தாலும் பொ.ஐ. முன்னணியில் இருந்து வெளியேறவோ அல்லது அரசை வீழ்த்தும் முயற்சிகளில் இறங்கவோ மாட்டார்கள் எனத் தெரிவித்தார்.

(ஐ - 10)

## 'திவயின' பத்திரிகைக்கு எதிராக அமைச்சர் சமரவீர வழக்கு

கொழும்பு, டிச. 8

அரசியல்வாதி என்ற வகையில் தனது பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் தான் தெரிவிக்காத உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிட்டதாகக் கூறி 'திவயின' பத்திரிகை நிறுவனத்துக்கு எதிராக அமைச்சர் மங்கள சமரவீர 10 கோடி ரூபா மான நஷ்டம் கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

' மங்கள மீண்டும் சங்கைக்குரியவர்களை (தேரர்களை) கொலையாளிகள் எனக் குறிசுட்டுள்ளார்'' என்ற தலைப்பில் கடந்த ஒக்ரோபர் 6 ஆம் திகதி 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. அந்த செய்தி தொடர்பாகவே அமைச்சர் சமரவீர வழக்குத் தொடுத்துள்ளார்.

(ஐ-10)

## ஈழத்துத் தமிழ்இலக்கிய வரலாற்றுக் கருத்தரங்கு

யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்த்துறைப் பேராசானும் சிறந்த கல்விமானுமாகிய கலாநிதி க. கைலாசபதிநினைவாகநேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றுக் கருத்தரங்கு மிகவும் சிறப்பாக நடந்தேறியது. கலைப் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ், தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் நா. சுப்பிரமணியன் மற்றும் தமிழ்த்துறை விரிவுரையாளர்கள் கலாநிதி எஸ். சிவலிங்கராசா, கி. விசாகரூபன், செல்வி சி. செல்வரஞ்சிதம், ம. ரகுநாதன், பொ. செங்கதிர்ச் செல்வன், திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் தமது ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்ததோடு கருத்துரையும் வழங்கினார்கள்.

கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் யாவும் றோணியோ செய்யப்பட்டு கலந்து கொண்ட பெரும்பாலானோருக்கு வழங்கப்பட்டன.

மேற்படி கருத்தரங்கில் உயர்தர வகுப்பு மாணவர்கள், ஆசிரியர்கள், பல்கலை மாணவர்கள், விரிவுரையாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள் உட்பட பல்வேறு தரப்பினரும் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.

(இ-7)

## மலேசியாவுக்கான தூதராக லயனல்

கொழும்பு, டிச.8

திறமை வாய்ந்த நிர்வாக அதிகாரியும் முன்னாள் யாழ். அரசாங்க அதிபருமான லயனல் பெர்னாண்டோ மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் பதவி உட்பட பல அரசாங்க உயர் பதவிகளை இவர் வகித்துள்ளார்.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், சிறிலங்கா துறைமுகக் கூட்டுத்தாபனம் போன்ற அமைப்புகள் லயனல் பெர்னாண்டோவின் தலைமையிலேயே உருவாக்கப்பட்டன.

(ஐ-10)

நகைப்பிரியர்களுக்கு !
05 - 12 - 97
வெள்ளி முதல்
தமது சேவையை
ஆரம்பித்துள்ளனர்
மீரா நகையகம்
பீச் றோட்,
யாழ்ப்பாணம்.
(சி/2388)

## மந்திகை ஆஸ்பத்திரிக்கு மாகாணசுகாதார பணிப்பாளர்

வடமராட்சி, டிச. 8

மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலைக்கு வடகிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் குமாரவேற்பிள்ளை அண்மையில் விஜயம் செய்து வைத்திய சாலையில் நிலவும்குறைபாடுகள், தேவைகள் குறித்துக் கேட்டறிந்தார்.

இவ் வைத்தியசாலையில் வைத்திய நிபுணர்கள் பற்றாக்குறை, கட்டடங்கள் பற்றாக்குறை, துணை வைத்தியப் பிரிவில் ஆய்வு கூட உத்தியோகத்தர்கள் இன்மை, மருந்தாளர்கள் பற்றாக்குறை போன்ற தேவைகள், குறைகள் குறித்து அவருக்கு விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

இங்கு நிலவும் குறைபாடுகளையும், தேவைகளையும் பூர்த்தி செய்ய உரிய நடவடிக்கை எடுப்பதாக மாகாண சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்தார்.

(ஐ-173)

## நூற்றாண்டு விழா

திருநெல்வேலி, டிச.8

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய நிறுவுநர் வள்ளல் ஏழூர் இராசரத்தினத்தின் சிலை திறப்பு நிகழ்வும், நூற்றாண்டு விழாவும் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் மகா வித்தியாலய அதிபர் சைவப் புலவர் சு. செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் பிரதம அதிதியாக வலி.வடக்கு பிரதேச செயலாளர் திருமதி ப.திலகநாயகம் போல் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழைக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. கமலநாதன், நிறுவுநரின் மகள் திருமதி கிருபாசக்தி தர்மதாசன் ஆகியோர் கலந்து கொள்வர். நிறுவுநர் நினைவுப்பேருரையை ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் நிகழ்த்துவார்.

(ஐ-135)

## அன்னை சாரதா பிறந்த தினம்

வடமராட்சி, டிச.8

தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் 145 ஆவது பிறந்த தினம் எதிர் வரும் 21 ஆம் திகதிபருத்தித்துறைஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது. அன்றைய தினம் விசேட பூஜை, வழிபாடு என்பனவும் சிறப்புச் சொற்பொழிவும் இடம் பெறும்.

(ஐ-173)

## வைத்திய பரிசோதனை

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம் அண்மையில் நவாலி கொத்துக்கட்டி தமிழ்க்கலவன் பாடசாலையில் நடத்திய இலவச நீரிழிவு, இரத்த அழுத்த வைத்திய பரிசோதனையின் போது 62 பேர் பரிசோதிக்கப்பட்டனர். இவர்களில் 9 பேருக்கு இரத்த அழுத்த நோயும், 4 பேருக்கு நீரிழிவு நோயும் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. மானிப்பாய் அரசினர் வைத்தியசாலை, சங்கானை அரசினர் வைத்தியசாலை ஆகியவற்றில் இவர்களுக்கான வைத்திய சிகிச்சையை பெறுவதற்கு லயன்ஸ் கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

(ஐ-135)

## சாவகச்சேரிப் பகுதியில் வயிற்றோட்டம் பரவுகிறது

தென்மராட்சி, டிச. 8

சாவகச்சேரிப் பகுதியில் பெய்துவரும் அடை மழையினாலும், நுளம்புக் கடியினாலும்வயிற்றோட்டம், காய்ச்சல் ஆகியவற்றால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

காய்ச்சல், வயிற்றுளைவினால் பாதிக்கப்பட்டு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் தினமும் 300- க்கு மேற்பட்டோரும், வாட்டுகளில் 15 பேரும் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வயிற்றுளைவினால் பாதிக்கப்பட்ட மட்டுவில் வடக்கைச் சேர்ந்த சின்னத்துரை தங்கம்மா (வயது 80) என்னும் மூதாட்டி மரணமாகியுள்ளார்.

(ஐ-117)

பருத்தித்துறை பிரதேசசபை புலோலி

**மீள் கேள்வி அறிவித்தல் - 1998 ஆம் ஆண்டு**

**இறைச்சிக்கடைகள், சந்தைகள் குத்தகை**

கேள்விப்படிவம் வழங்கல் 1997 - 12 - 18 ஆம் திகதி பி. ப. 3-00 மணி வரை
கேள்விப்படிவம் ஏற்றல் 1997 - 12 - 19 ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை
கேள்விப்படிவம் திறத்தல் 1997 - 12 - 19 ஆம் திகதி பிற்பகல் 12-30 மணிக்கு

அட்டவணை

| குத்தகை விவரம் | ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்விவைப்புப் பணம் | படிவக்கட்டணம் |
|---|---|---|---|
| 1. மந்திகை ஆட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,500.00 | 150.00 |
| 2. நாகர் கோவில் மாட்டிறைச்சிக்கடை | 6,000.00 | 1,000.00 | 150.00 |
| 3. செம்பியன்பற்று மாட்டிறைச்சிக்கடை | 5,000.00 | 1,000.00 | 150.00 |
| 4. தாளையடி மாட்டிறைச்சிக்கடை | 8,000.00 | 1,000.00 | 150.00 |
| 5. கெருடாவில் சந்தை | 600-00 | — | 150.00 |
| 6. கற்கோவளம் சந்தை | 3,000.00 | — | 150.00 |

மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். இப் பிரதேசசபை எல்லைக்குள் எனது அனுமதியின்றி எவரும் இறைச்சி விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

ஆ. சிவசுவாமி,
விசேட ஆணையாளர்.

(சி-2284)

**33 ஆம் நாள் நினைவஞ்சலி**

மலர்வு: 10 — 01 — 1940



உதிர்வு: 06 — 11 — 1997

அமரர் சுவாமிநாதன் சண்முகலிங்கம்

(முன்னாள் தபால் அதிபரும், சங்கானை ப. நோ. கூ. சங்க கிளைக்குழு16 இன் தலைவரும்)

கந்த சஷ்டிப் புராண படனம்
விந்தையாக விருப்புடன் செய்து
சொந்தவூர் திரும்பும் சிறுபொழுததனிற்
கந்தன் கழலடி கவிநெடுஞ் சேர்ந்தனன்.

கிளைக்கு- இல- 16,
வட்டு. வடக்கு, சித்தங்கேணி.

(51629)

"கிறிஸ்மஸ்" மாபெரும் மலிவு விற்பனை
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மேலும் நீடிக்கப்பட்டுள்ளது
காவேரி சில்க்ஸ் 48, பெரியகடை, யாழ்ப்பாணம். (51638)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பெருகும் கொள்ளைகள்

குடாநாட்டு மக்களை இப்போது அச்சுறுத்தி வரும் பயங்கரங்களில் திருட்டுக்களும், கொள்ளைகளும் முதலிடம் வகிக்கின்றன. நகரம், பட்டினம், கிராமம் என்று எல்லா இடங்களிலுமே திருட்டுக் கொள்ளையும் அதிகரித்துள்ளன.

பாதுகாப்புப் படையினர் அமைத்துள்ள இராணுவவேலிக்குள்ளேயும், வெளியேயும் தடுப்பார் எவருமின்றி கொள்ளைகள் நடைபெறுகின்றன. இராணுவத்தினர் வந்திருக்கிறோம்; வீட்டைச் சோதனை போட வேண்டும் என்று அச்சுறுத்திக் கதவைத் திறக்க வைத்துக் கொள்ளை அடிப்பது ஒரு ரகம். இயக்கத்தினர் வந்திருக்கிறோம் என்று கூறிக் கதவைத் திறக்கச் செய்து வீட்டில் இருக்கும் பொருள்களைச் சூறையாடுவது இன்னொரு ரகம்.

கொள்ளைக்காரர்கள், திருடர்கள், முகமூடித் திருடர்களாக இனங்காட்டியும், வெவ்வேறு உத்திகளைக் கையாண்டும், வீட்டுக்காரர்களின் உயிர்களை 'விலைபேசி'யும் கொள்ளைகளை நடத்துகின்றனர். 'பவுடர்' வீசி வீட்டில்இருப்போரை மயக்கமுறச் செய்துவிட்டு நடத்தப்படும் புதிய வித கொள்ளைகளும் சில இடங்களில் நடைபெற்றுள்ளன.

திருட்டுக்களும், கொள்ளைகளும் பெருகுவதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் உள்ளன.

குடாநாட்டின் சகல பகுதிகளிலும் இரவு நேர ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ளது. அதனைப் பயன்படுத்தித் திருட்டைத் தொழிலாகக் கொண்டவர்கள் மட்டுமன்றி, அமெச்சூர்களும் இந்தப் பாதகச் செயலில் ஈடுபடும் வாய்ப்பு உண்டு.

ஊரடங்கு வேளையில் எவ்வித ரோந்தும் இல்லை என்று கொள்ளையர்களுக்குப் பெரும் வாய்ப்பாகி விட்டது. ஊரடங்கு உள்ளதால் ஒரு வீட்டில் நடக்கும் கொள்ளை அறிந்து அயலவர்கள் தாமும் சென்று கள்வரை இனங்காண முடியாமல் கூடப் போய்விடுகிறது.

இரண்டாவது காரணம் — சமூகத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டும் பொறுப்புடைய பொலீஸ் குடாநாட்டில் மிகமிகப் பலவீனம் அடைந்த நிலையில் உள்ளது. குற்றச் செயல்களைத் தடுக்கக் கூடிய வல்லமை அதற்கில்லை.

சிறு குற்றச் சம்பவங்கள் தொடர்பாகக் கூட முறைப்பாடுகளைப் பதிவு செய்வதனை விட அதற்கு மேலால் பொலீஸால் செய்ய முடியவில்லை. தமிழ் தெரிந்த பொலீஸார் போதிய அளவு இல்லை. களத்தில் சென்று புலன் விசாரணை செய்து குற்றவாளியைக் கண்டு பிடிக்கக் கூடிய வழமையான முறையில் அலுவல்கள் நடைபெறுவதில்லை. சந்தேக நபரைத் தெரிந்தால் மட்டுமே முறைப்பாடு ஏற்றுக் கொள்ளப்படும் என்ற நிலை!

ஏற்கனவே அளவு கணக்கில்லாத இழப்புக்களை அனுபவித்தவர்கள் குடாநாட்டு மக்கள். அவர்களிடம் மிச்ச சொச்சமாக உள்ளவற்றையும் கூட கொள்ளையர்கள் சூறையாடினால் அவர்களின் நிலை...?

முழுமையான இயல்பு வாழ்க்கை நிலை உருவாகாததால் மக்கள் உள்ளூரப் பதற்றத்துடனேயே (மிகக் குறிப்பாக இரவில்) வாழ்கின்றார்கள். கொள்ளைகள் அவர்களை மேலும் பீதியுற வைத்துள்ளது.

இந்த நிலையை நீக்கி குடாநாட்டு மக்களுக்கு நிம்மதியை உண்டாக்கவும், பொருள் இழப்பைத் தடுக்கவும் அரசு உகந்த நடவடிக்கைகளை எடுக்கப் போகிறதா?

அல்லது வெறுமனே கை கட்டிப் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறதா?

# கர்ப்பிணி பெண் சுடப்பட்டது பற்றி விசாரணை நடத்தப்பட வேண்டும்

## மட்டக்களப்பு எம்.பி ஜனாதிபதியிடம் முறையீடு

மட்டக்களப்பு, டிச. 8

வாழைச்சேனை விநாயகபுரம் அகதி முகாமைச்சேர்ந்த நிறைமாதக் கர்ப்பிணிப் பெண் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்குள்ளான சம்பவத்தில் அப்பெண்ணின் கருப்பையிலிருந்தசிசு மரணம் அடைந்த விவகாரம் குறித்து மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர் கி. துரைராஜசிங்கம் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

5-12-97 அன்று இராணுவம் அப்பிரதேசத்தில் மேற்கொண்ட தேடுதலின்போது இடம் பெற்ற துப்பாக்கி பிரயோகத்தில் நிறைமாத கர்ப்பிணியான தயாளநாயகி வீரகுமார் (வயது 22) உட்பட 3 பேர் துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்தனர்.

இச்சம்பவம் குறித்து மட்டக்களப்பு மாவட்ட எம். பி. ஜனாதிபதிக்கு நேற்று முன்தினம் அனுப்பிவைத்துள்ள அவசர 'பக்ஸ்'இல் தெரிவித்துள்ளதாவது:-

சம்பவதினம் வாழைச்சேனை பிரதேசம் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் இடம் பெற்றது. விநாயகபுரம் அகதி முகாமில் வசித்தவர்களும் விசாரணைக்காக அழைத்து செல்லப்பட்டனர்.

கணவன் அழைத்துச் செல்லப்பட்டபோது அவரை விடுமாறு கேட்டு கர்ப்பிணிப் பெண் தயாளநாயகி அவரது இரண்டரை வயதுக்குழந்தை சகிதம் இராணுவத்தைப்பின் தொடர்ந்து சென்ற போது இராணுவ வீரரொருவர் திடீரென பின்நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்துள்ளார்.

தாயும் குழந்தையும் வெடிபட்டு விழுந்த போதிலும் இராணுவம் பாராமுகமாக கைதானவர்களை அழைத்துச் சென்றுள்ளது.

கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றில் துப்பாக்கி ரவை துளைத்துவிட்டது. வைத்திய நிபுணர்கள் அறுவைச் சிகிச்சை மூலம் இறந்த சிசுவை அகற்றினர்.

கைது செய்யப்பட்டவர்களில் எஸ். கோபால் (31 வயது), எஸ். யேசுதாசன் (42 வயது), கே. குகன் (21 வயது) ஆகியோர் தாக்கப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இராணுவம் பொது மக்களுடன் நடந்து கொள்ளும் விதம் இதுவல்ல. இராணுவத்தின் கண்மூடித்தனமான இந்நடவடிக்கை கண்டிக்கக் கூடியது.

இச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட இராணுவ வீரர்களைக் கண்டுபிடித்து தண்டனை வழங்க வேண்டும்.

இப்படி குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-21)

## சினைப்பர் தாக்குதல்

மட்டக்களப்பு வாழைச்சேனை கிண்ணியடியில் நேற்றுக் காலை இடம்பெற்ற சினைப்பர் தாக்குதலில் ஓர் இராணுவச்சிப்பாய் காயமடைந்தார்.

இராணுவ முகாம் சுற்றாடலிலுள்ள கிணற்றில் குளிக்க வந்த சமயம் இத்தாக்குதல் இடம்பெற்றது. (இ-21)

## சிறுவன் காயம்

மட்டக்களப்பு வாழைச்சேனையில் நேற்று மாலை இராணுவத்தின் துப்பாக்கிப் பிரயோகத்தில் 14 வயதுச் சிறுவன் ஒருவன் காயம் அடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான். (இ-21)

### அரசமைப்பு திருத்தத்துக்கு எதிராக

# 39 லட்சம் கையொப்பங்களை சிறிமானி கட்சி சேகரிக்கும்

கொழும்பு, டிச. 8

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசால் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கத்துடன் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசமைப்புத் திருத்தத்துக்கு எதிராக சிறிமானி அத்துலத்முதலி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி எதிர்ப்புக் கூட்டங்களை நடத்தி வருகின்றது.

உத்தேசிக்கப்பட்டுள்ள மக்கள் கருத்துக் கணிப்புக்கு எதிராக 39 லட்சம் வாக்காளர்களின் கையொப்பங்களைப் பெறும் நடவடிக்கையில் அக்கட்சி தற்போது ஈடுபட்டுள்ளது. (இ-10)

# கொல்லப்பட்ட லெப். கேணல் பல யுத்த முனைகள் கண்டவர்!

வன்னி மன்னகுளம் தாக்குதலில் கொல்லப்பட்ட உயர் அதிகாரிகளில் முதலாவது இராணுவ கொமாண்டோப் படை அணியைச் சேர்ந்த லெப். கேணல் நிலாந்த லக்மல் ஸ்ரீமானவும் ஒருவர் என பாதுகாப்பு தரப்பு தெரிவித்தது.

இராணுவத்தில் சிறப்புப் பயிற்சி பெற்ற இவர் வடக்கில் இடி முழக்கம், சூரியப் பிரகாசம், வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கைகளில் முன்னணி வகித்தவர் என்றும் பாதுகாப்பு தரப்பு தெரிவித்தது. (இ-21)

# ஓய்வுபெற்ற படையினர் சங்கம் புத்தகங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், டிச. 8

இராணுவத்தின் சிங்கப் படையணியில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களின் சங்கம் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்களை யாழ். சென். ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயத்துக்கு வழங்கியுள்ளது.

இந்த புத்தகத்தொகுதியை நேற்று நண்பகல் ஞானம்ஸ் ஹோட்டலில் நடந்த வைபவம் ஒன்றில் வைத்து 512 ஆவது படையணியின் தளபதி பிரிகேடியர் சுஸந்தமெண்டிஸ் வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் சு. இரத்தினராசாவிடமும், வித்தியாலய அதிபரிடமும் கையளித்தார். (இ-3)

## செயலமர்வு

வேம்படி மகளிர் கல்லூரியில் 12-6-97 முதல் நடைபெற்ற முரண்பாட்டுத் தீர்வுக்கான கல்விச் செயலமர்வில் பங்குபற்றிய அனைவருக்குமான 2 ஆம் கட்ட செயலமர்வு இன்று காலை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

## பரிசில் நாள்

மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயத்தின் பரிசில் நாள் நிகழ்வு இன்று திங்கள்காலை 9. 30மணிக்கு பாடசாலை அரங்கில் அதிபர் இ. கந்தசாமி தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ. கணேசனும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிக் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் இ. கயிலைநாதனும், நா. சத்தியநாதனும் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக முன்னாள் தென்மராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஸ்பா கணேசலிங்கமும், முன்னாள் கொத்தணி அதிபர் அ. பொ. செல்லையாவும் கலந்து கொள்வர்.

## ஜி. சீ. ஈ. பரீட்சை மாணவருக்கு

ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கு வேறு மாவட்டங்களில் இருந்து விண்ணப்பித்து தற்போது இங்கு மீளக் குடியேறிய மாணவர்கள் தமக்குரிய பரீட்சை அனுமதி அட்டைகளை யாழ். கல்வி வலயம் 1 இல் இன்று முதல் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# பிறர் அன்பைத் தொட்ட மரியாள் அருளின் ஊற்றாகப் பிரவகித்தாள்

புனித மரியாளின் உற்சவ தினம் இன்றாகும். அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

மண்ணகத்தில் பிறக்கும் மானிட உயிர்கள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் பாவக்கறைபட்ட பிறவிகள் என்பதை வேதம் சொல்கின்றது. செந்தாமரையின் கருவறை சேறுதானே. ஆனால் மரியாள் இறைவனின் அருளால் இச் சுழியில் அகப்படவில்லை.

அன்று இறைவனின் தூய்மைக்கு எதிர் முனைவுபட்டதாக மனிதன் பாவச் சேற்றில் அழுந்திக்கொண்டிருந்தான்:

பாவப்பிடியிலிருந்து தன் குமாரன் மூலம் மனுக்குலத்தை மீட்பதாக இறைவன் வாக்குப் பண்ணினார். தேவகுமாரன் யேசுபாலனை உலகத்திற்குக் கொடுக்க இறைவன் உத்தமி ஒருத்தியை நினைத்தார். சாத்தானுக்குக் கொடுக்கப்பட்ட சாபத்தின் போது தான் அன்னை மரியாளின் பிறப்பும் அம்பலத்திற்கு வந்தது.

எதிர்காலக் கனவுகளை, அடிமனத்தை வருடும் எதிர்பார்ப்புகளை நினைத்து மனுக்குலம் முழுவதும் கலங்கித் தவிக்கும் வேளையிற்றான், யுவக்கீனுக்கும் அன்னம்மாவுக்கும் மகளாக உற்பவித்தாள் மரியாள் கருவிலே அவள் புனிதையாகத் திருவுருக் கொண்டாள், அன்பு, அடக்கம், உண்மை என்ற பண்புகளோடு மரியாள் வளர்ந்தாள். பிறரன்பைத் தொட்டு நின்ற அவள் வாழ்வு அருளின் ஊற்றாகப் பிரவகித்தது. அதனாற்றான், அருள் நிறைந்த மரியே வாழ்க! என இறைதூதன் கபிரியேல் அவளை வாழ்த்துவதை நாம் கேட்டிருக்கின்றோம்.

மக்களின் மீது அவளுக்கு அலையலையாக எழுந்தஅனுதாப உணர்வினால் பாத்தியாபதியிலும், சிறப்பாக உலகின் புகழ் பூத்த யாத்திரை ஸ்தலமாக விளங்கும் பிரான்சிலுள்ள லூர்து கெபியிலும் அவள்தன்னை வெளிக்காட்டியிருக்கின்றாள். லூர்துகெபியில் புனித பெர்னதேத்துக்கு முன்தோன்றி ''அமலஉற்பவம் நாமே' என்று திருவாய் மலர்ந்தது என்றுமே அஸ்தமிக்காத தனது அன்பை மரியாள் வெளிப்படுத்தியிருக்கின்றாள்.

''வெள்ளத்து அனையது மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத்து அனையது உயர்வு'' என்ற வள்ளுவரின் மொழிக்கேற்ப மரியாள் தன் உள்ளத்தால் உயர்ந்து நிற்கின்றாள்.

குண்டுச் சத்தங்களினால் அதிர்ந்து நமது மண் மயான பூமியாகத் தோன்றுகின்றது. நம்மக்கள் அவலச் சுமையுடன் பெருமூச்சிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். என்ன தான் நடக்குமோ என்ற ஆதங்கம், எப்படித்தான் வாழப்போகின்றோம் என்ற அங்கலாய்ப்பு இல்லாதவர்களைக் காண்பதே அரிதாகி விட்டது. போகுமிடம் அறியாத பயணஞ்செய்யும் மக்களின் பரிதாப நிலை. அவலங்களை நிலையில் அறையும் இரவுகள், நல்லெண்ணத்தைக் கழுவிலேற்றும் கைங்கரியங்கள், என்ன விலை கொடுத்தாயினும் சமாதானத்தைக் கண்டுவிட வேண்டுமென்ற முயற்சிக்கு வைக்கப்படும் சின்னத்தனமான ஆப்புகள். மக்களின் இயல்பு வாழ்க்கையே அதல பாதாளம் நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. இவைதான் நமது மண் காணும் யதார்த்தம்.

நாங்கள் மட்டும் என்னவாம்? அயலவனை அன்பு செய்கின்றோமா; நெஞ்சத்தில் ஆழப் புதைந்திருக்கும் வஞ்சனையை எடுத்தெறிந்து விட்டு மற்றவனுடன் ஒப்புரவாகின்றோமா; மற்றவனுடைய பொருளில் எழும் இச்சையைத் தவிர்க்கின்றோமா? அன்றாடங்காய்ச்சிகளாக மக்கள்அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கும் இன்றைய நிலையிற் கூட அநியாய வட்டி வாங்குகின்றோமே! இதுபோதாதா? இப்படிப்பட்ட சமூகவிரோதச் செயல்களை எப்படி நாம் நியாயப்படுத்துவது?

மரியாளின் மாசில்லாத உற்பவத்தை நினைவு கூர அழைக்கப்பட்ட நாங்கள் எமது தீய வாழ்வைக் கைநெகிழ்ந்து அவள் காட்டிய பாதையிலே செல்லச் சங்கற்பம் செய்து கொள்வோம். அவள் பேணி வளர்த்த உயர் விழுமியங்களைக் கைக்கொள்வோம்.

மரியே வாழ்க! என்று சொல்வதோடு நின்றுவிடாமல், மற்றவர்களுக்காக வாழும் தியாக வாழ்வின் மூலம் இவ்விழாவை அர்த்தமுள்ளதாக்குவோம்.

மு. சிங்கராயர்

## நாளை

**கார்த்திகை 24**

செவ்வாய்க்கிழமை

திதி: தசமி

பிற்பகல் 5-22 வரை.

நட்சத்திரம்: ரேவதி

பின் இரவு 4.20 வரை.

சுபநேரம்: 10.48-12.18

ராகுகாலம்: 3.18-4 48

(பகலுக்கும் இரவுக்கும் வழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
### அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

**பரிசு பெற்ற இலக்கங்கள்**

முதலாம் பரிசு:- 1053
இரண்டாம் பரிசு:- 1357
மூன்றாம் பரிசு:- 6382

**ஆறுதல் பரிசுகள்**

| | | | |
|---|---|---|---|
| 8499 | 7266 | 5539 | 5822 |
| 2326 | 2285 | 6771 | 6291 |
| | 6470 | 2741 | |

(பரிசு பெற்றோர் 31-12-97 க்கு முன்னர் அலுவலக நேரத்தில் கல்லூரியுடன் தொடர்பு கொள்ளவும்)

- செயலாளர்

(சி/2292)

## சிமெந்து விநியோகம்

க. பொ. கூட்டுத்தாபனத்தால் சர்வதேச தரத்துக்கமைய (525R) சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட EAGAL சிமெந்து கட்டுப்பாடின்றி விநியோகிக்கப்படும். மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**மொத்த விலை: ரூபா 460.00**
**சில்லறை விலை: ரூபா 470.00**

க. பொ. கூட்டுத்தாபனம் (வ/ப)
164, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (51624)

## புதிய கல்வி ஆண்டு 1998
### 4, 5, 6, 7, 8, 9, 10, (O/L)

ஆண்டுகளுக்கான புதிய பிரிவுகள்

ஆரம்பம்: 09-12-97 (செவ்வாய்) பி. ப. 3-00மணி

- ஒவ்வொரு மாத இறுதியிலும் பரீட்சைகள் நடைபெறும்.
- மாணவர்களின் ஒழுங்கு மிகவும் கவனிக்கப்படும்.
- விஞ்ஞானம் பரிசோதனை, செய்முறை மூலம் கற்பிக்கப்படும்.
- 5-ம் ஆண்டு புலமைப் பரிசில்பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு விசேட வகுப்புக்கள்நடைபெறும்.
- ஆண்டு 9, 10, 11 க்கான பிரத்தியேக கணித வகுப்புக்கள் முற்பகல் 6-15 — 7-15 வரை நடைபெறும்.

15-12-97வரை புதிய அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**"கிறிஸ்ரல் சென்ரர்"**
நெல்லியடி. (நெ. ம. ம. வீதி)

(51653)

## The Lyceum of English Studies

**Courses:**
1) Basic English
2) Business English
3) English for Employment
4) G.C.E. O/L Language and Literature

''Special Art Classes for School Leavers''
(Limited Admissions)
Commencement: 15-12-97

**ஆண்டு 7 தொடக்கம் G.C.E. O/L**
வரையிலான பின்வரும் பாடங்கள் நடைபெறும்.

| | |
|---|---|
| ஆங்கிலம் | திரு. இ. பி. சங்கர், திரு. க. சுப்பிரமணியம் |
| தமிழ் | திரு. ஆர்த்திகன் |
| கணிதம் | திரு. கோணேஸ்வரன் |
| விஞ்ஞானம் | திரு. டார்வின் |
| சமூகக்கல்வி | திரு. முத்துலிங்கம் |
| வரைதல் | திரு. Art சங்கர் |

**ஆரம்பம்: 15-12-97 திங்கட்கிழமை**

தொடர்பு:-
The Administrating Officer,
The Lyceum of English Studies,
No 189, Adiapatham Rd,,
Thirunelvely, Jaffna.

(மருத்துவ பீடத்துக்கும், திருநெல்வேலி இந்து இளைஞர் சங்கத்திற்கும் இடையில்)

(51654)

## பாதுகாப்பையொட்டி..

(முதலாம் பக்கத் தொடர்)

வர்.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் அமையும் இந்த ஒருங்கிணைப்புக் கூட்டுப்பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் 6 வலயங்களுக்கும் பொறுப்பாக ஒவ்வொரு கட்டளை அதிகாரிகள் இருப்பர். ஒவ்வொரு கட்டளை அதிகாரியின் கீழும் இருபிரிவுகள் செயற்படும்.

அந்தப் பிரிவுகள் குறிப்பிட்ட வலயப் பகுதியில் தேடுதல், சுற்றிவளைப்பு, சோதனைச் சாவடிகள் அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளும்.

உருவாக்கப்பட்ட 6 வலயங்களுக்குள்ளும் உள்ளடக்கப்பட்டுள்ள பகுதிகள் வருமாறு:

★ வலயம் 1 — தெமட்டகொடை, கிராண்ட்பாஸ், மாளிகாவத்தை, முகத்துவாரம்.

பொலீஸ் அதிகாரி கட்டளை அதிகாரியாக இருப்பார்.

★ வலயம் 2—கோட்டை, புறக்கோட்டை, கெசல்வத்தை, கொட்டாஞ்சேனை.

கடற்படை அதிகாரி கட்டளை அதிகாரியாக இருப்பார்.

★ வலயம் 3 —கொள்ளுப்பிட்டி, கொம்பனித் தெரு — கட்டளை அதிகாரி நியமிக்கப்படவில்லை.

★ வலயம் 4 — பம்பலப்பிட்டி, பொரளை, கறுவாக்காடு.

இராணுவ அதிகாரி கட்டளை அதிகாரியாக இருப்பார்.

★ வலயம் 5 — வெள்ளவத்தை, கிருலப்பனை, நாரஹேன்பிட்டி,

பொலீஸ் அதிகாரி கட்டளை அதிகாரியாக இருப்பார்.

★ வலயம் 6 — கொழும்பு துறைமுகம், அதன் சுற்றாடற் பகுதி.

கடற்படை அதிகாரி கட்டளை அதிகாரியாகஇருப்பார்.

## கைதடி...

(முதலாம் பக்கத் தொடர்)

கப்பட்டது.

இவரது மனைவி யாழ். செயலகத்தில் பணிபுரிபவர் என்றும் —

மனைவி தனது பிள்ளைகளுடன் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தார் என்றும் —

இறந்தவர் தனியாக கைதடியில் உள்ள தனது வீட்டில் வசித்து வந்தார் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

(இ-3-9-117)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்)

நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜோசப் பரராஜசிங்கம், கலாநிதிநீலன் திருச்செல்வம், இரா சம்பந்தன், கி. துரைராஜசிங்கம், பொ. செல்வராசா உட்பட பலஉறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

வடக்கு உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவது குறித்து ஆராயப்பட்ட போதிலும் தேர்தலிற் போட்டியிடுவதா? அல்லது இல்லையா? என்ற தீர்மானம் எதுவும் நேற்றைய கூட்டத்தில் எடுக்கப்படவில்லை எனத் தெரியவந்தது.

மேற்படி கூட்டம் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொலிட்பியூரோ நேற்று மாலை அறிக்கை ஒன்றை விடுத்தது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''தேர்தல் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் சுதந்திரமான, நியாயமான முறையில் தேர்தல்கள் நடைபெறக்கூடிய தளநிலைமை தற்போதுஇல்லை.

வேலணை, நெடுந்தீவு, ஊர்காவற்றுறை பிரதேசங்கள் தேர்தலில் போட்டியிட விருப்பம் தெரிவித்துள்ள ஆயுதக்குழு ஒன்றின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதால் இப்பிரதேசங்களில் தேர்தல்கள் நடத்தப்படக் கூடாது.

குறிப்பாக முஸ்லிம்கள் உட்பட இடம்பெயர்ந்த மக்கள் பலர் இன்னும் மீளக் குடியமரமுடியாத நிலையில் இருந்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் மக்கள் நடமாட்டம் தொடர்ந்து கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது.

தேர்தல்கள் நடத்த முன்பு ஆயுதம் தாங்கிய அரசியல் கட்சிகளின் ஆயுதங்கள் முற்றாக களையப்படவேண்டும்''

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது (இ-21)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்)

என எதிர்பார்க்கப்படுகிறது.

அதே நேரம் — யாழ். மாவட்டத்தில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பின்போடுமாறு அமைச்ச[illegible] சிகள் கோரும் என மற்றொரு செய்தி தெரிவித்தது.

## மனித உரிமைகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

இருந்து பேரணி ஆரம்பமாகி ஸ்ரான்லி வீதி, கஸ்தூரியார் வீதி, ஆஸ்பத்திரி வீதி, கண்டி வீதி ஆகியவற்றின் ஊடாகச் சென்று யாழ் அரச அதிபரிடம் செயலகத்தில் வைத்து மகஜர் கையளிக்க ஏற்பாடாகியுள்ளது.

அதன் பின் பேரணியினர் கச்சேரி — நல்லூர் வீதி வழியாகச் சென்று நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் உண்ணாவிரதம் அனுஷ்டிப்பார்கள்.

மத நிறுவனங்கள், வர்த்தக ஸ்தாபனங்கள் மற்றும் பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோரின் ஆதரவை பேரணியின் ஏற்பட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

## COLLEGE OF COMMERCE

நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

புதிய வகுப்புக்கள்

**ஆண்டு 8 முதல் 11 வரை**

ஆரம்பம்: 10 - 12 - 1997 புதன் 3.00 மணி.

யாழ். தனித்துவம்பெற்ற ஆசிரியர் குழுவினால்

| | |
|---|---|
| கணிதம் | திரு. கருணாகரன் |
| விஞ்ஞானம் | திரு. தேவா |
| தமிழ் | திரு. கதிர்காமத்தம்பி, திரு. திருதங்கவேல் |
| வரலாறு, சமூகக்கல்வி | திரு. கே. எஸ். முத்துலிங்கம் |
| ஆங்கிலம் | திரு. மகாலிங்கம், திரு. வாகீசர் |
| வர்த்தகம் | திரு. சுபேசன் |
| சமயம் | திரு. என். ரி. தரன் |

Note:

★ கணிதம், விஞ்ஞானம் இப்பாடங்களுக்கு கடந்த 26 வருட வினாக்கள் அலகு ரீதியாக மீட்கப்படும்.

★ பிரிவு 1 ற்கான அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

நிர்வாகி

(51657)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பையா தெட்சணாமூர்த்தி

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா தெட்சணாமூர்த்தி (கார்—சின்னத்தம்பி) அவர்கள் 07-12-97 ஞாயிற்றுக்கிழமையன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 07-12-97 அன்று மாலை அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
மனைவி. பிள்ளைகள்

101, பலாலி றோட்,
கந்தர்மடம். (51658)

### சுப்பிரமணியம் குணரத்தினம்

(நாரந்தனை வடக்கு, நாரந்தனை)

நாரந்தனை வடக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் குணரத்தினம் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியம் — வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும், இராசதுரை (ஓய்வு பெற்ற அதிபர், அக்கராயன்), பொன்ராசா (கட்டடத் திணைக்களம்), தங்கராசா, சகுந்தலாதேவி, சரஸ்வதி, ஏகநாயகி, தங்கமணி (வவுனியா), பராசக்தி (வெள்ளவத்தை), ஜவகர்லால் நேரு (கனடா), கேசவநாதன் (கொழும்பு மாலவன்ஸ் உரிமையாளர்), சுகுணமணி (கனடா), சாரதாமணி (பம்பலப்பிட்டி) ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, இராமநாதர், நவரெத்தினம், செல்வபாக்கியம், முத்தம்மா, லெட்சுமிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், நாரந்தனை வடக்கு கோபாலசிங்கம், ஞானசிங்கம் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், இலட்சுமி தேவியின் சிறிய தந்தையும், சந்திரவதனி, பத்மினி, இளங்கோ, கருணாகரன், வாழினி, யாமினி, வத்சலா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (8-12-97) பிற்பகல் 2.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பொன்னம்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. கோபாலசிங்கம்
(மருமகன்)

நாரந்தனை வடக்கு,
நாரந்தனை. (51660)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்[illegible] வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08-12-97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org